2004 ஜூலை 31]

நேரத்தில், 40 ஆயிரம் கோடி, 50 ஆயிரம் கோடி என்று விவசாயிகளுக்கு subsidy வழங்குகிறார்கள். ஆனால் அதே உலக வர்த்தக ஒப்பந்தத்தைச் சொல்லிக் காட்டி, இந்தியாவிலே விவசாயிகளுக்கு subsidy கொடுப்பது கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று மைய அரசு மாநில அரசை வற்புறுத்தி, விவசாயிகளுக்குத் தொல்லையைத் தருகிறது. இவற்றையெல்லாம் மாற்ற வேண்டும் என்றும், Import duty அதிகம் போடப்பட வேண்டும் என்றும், அதன் மூலமாக விவசாய விளைபொருட்கள், சிறு தொழில்கள்—SSI Units--இவையெல்லாம் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மைய அரசை வற்புறுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

104—

வேலைவாய்ப்பு

***38746–திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், வட சென்னை அனல் மின் திட்டத்திற்கும், எண்ணூர் துறைமுகத்திற்கும் நிலம் அளித்த பெரும்பாலான மக்களுக்கு அரசு வேலைவாய்ப்பு அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில். வட சென்னை அனல் மின் நிலையக் கட்டுமானத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும்போது நிலத்தில் குடியிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவர் வீதம் பணி வழங்கப்பட்டுவிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2004 ஜூலை 31

எண்ணூர் துறைமுகக் கட்டுமானப் பணியில் வாரியத்திற்கு நேரடித் தொடர்பு இல்லாததனால், அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாரியம் வேலைவாய்ப்பு அளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எண்ணூர் துறைமுகக் கட்டுமானப் பணியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாவிட்டாலும், இது மத்திய அரசு தொடர்புடையதால் மத்திய அரசை, துறை வற்புறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியே, பொன்னேரி தொகுதியில் வட சென்னை அனல் மின் நிலையக் கட்டுமானத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும்போது நிலத்தில் குடியிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவர் வீதம் பணி வழங்கப்பட வேண்டும் என்பது. எண்ணூர் துறைமுகக் கட்டுமானப் பணியில் வாரியத்திற்கு நேரடித் தொடர்பு இல்லாததனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எனவே, அந்தக் கருத்தின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கு அந்தக் கருத்துரு அனுப்பி வைக்கப்படும். அதே நேரத்திலே, இதிலே என்ன பிரச்சினை என்றால், பொன்னேரி தொகுதி, வட சென்னை அனல் மின் நிலையத்திற்கு நிலம் அளித்த மொத்தம் 891 பேரில் 241 பேருக்கு வேலை வழங்கப்படவில்லை; எனவே, அவர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்பது மின் வாரியத்தின் கருத்து. எனவே, யார் அந்த 241 பேர் என்கின்ற ஒரு பட்டியலைப் பொறுத்தவரை அங்கே இருக்கின்ற அந்தக் கிராம மக்களிடையே ஒரு சிக்கல் இருக்கின்றது. அந்தப் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலே கொடுத்துவிட்டால், அந்த 241 பேருக்கும்கூட வாரியத்திலே வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 ஜூலை 31]

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 105, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

105—

சமுதாய நலக் கூடம்

***48959—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரத்தில் அருள்மிகு தில்லையம்மன் கோயில் அருகே கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தைப் பயன்பாட்டில் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில், சிதம்பரம் நகரத்தில் அருள்மிகு தில்லையம்மன் திருக்கோயில் அருகே கட்டப்படும் சமுதாய நலக் கூடத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கு 28,00,000 ரூபாய்க்கான மதிப்பீடு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகளைச் சுற்றுலா வளர்ச்சித் துறையின் மூலமாக விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

106—

மருத்துவமனை

***23967—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—